ஓம் சரவணஜோதியே நமோ நம

ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

25.06.2026

1. கலியிடரை வென்று காக்க
கந்தனே நின்றருள் செய்யும்
அழியாமை தரும் பிரணவக்குடிலாம்
அரங்கனென் ஞானசபை நோக்கி

2. நோக்கியே உலக மக்கள் வர
நிலவுலகில் நன்மை கூடுமென
ஆக்கம் தந்து குருவார அருளாசியை
அரங்கன் யான் பராபவ மிதுன திங்கள்

3. திங்களிலே ஈராம் குருவார ஆசியாக
தேற்றம் காணவே உரைப்பேன்
ஓங்காரன் ஆளுமை புரிகின்ற
ஓங்காரக் குடிலை அடையாளம்

4. அடையாளம் கண்ட மக்களெல்லாம்
ஆனந்தம் பேரானந்த கதியை
தடையற அடைவது உறுதி
தன்பிறவி நோக்கம் அறிந்து

5. அறிந்து தெளிந்து நன்கு
ஆபத்தை வெல்வது உறுதி
அறிந்து வேலவன் தருகின்ற
அருளமுதை அணுகி உண்பவர்க்கு

6. உண்பவர்க்கு உடல் பிணி நீங்கி
உயிர்தனை காக்கும் பலமும்
சண்முகனார் தயவு கிட்டியே
சகலரும் சமம் என்ற மேல்நிலை

7. மேல்நிலை பெருகி தன்னுள்ளே
மக்களுள் பேதம் கருதா
நல்நிலை ஞானநிலை கூடி
ஞானிகள் போல செயல்முறைகள்

8. செயல்முறைகள் சிறந்து நிற்பர்
செகத்தில் தயவுநிலை கூடி
நேயம்பட பிறர் பசி பிணி விரட்டும்
நல் தானதரும வழி கரம் நீட்டி

9. நீட்டியே பிறருக்கு உதவி
நிலமதனில் தருமவான் ஆவர்
கட்டம் வாட்டம் போக்குகின்ற
கருணைமிகுந்த அன்னதான சேவை

10. சேவை நிறைந்த அரங்கனென்
சிறப்பான செயல்பாடு வழியில்
அவணியோர் நாடி வந்து நன்கு
அளவிலா பொருளுதவி செய்து வர

11. செய்துவர தரும ஞானவாழ்வாக
சேவை பெருகி வருவோரெல்லோரும்
மெய்ஞான வாழ்வை அடைவர்
மொழிந்திட்ட அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி